**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.177/2016</u>**

<u>முன்னிலை - பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வம் என்கிற வெள்ளைசாமி | தந்தை பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 07.01.2025

**P.W. : 2**

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 ஆம் வாதி சித்ரா எனக்கு பங்காளி என்ற உறவு முறையில் அக்கா மகள் வேண்டும். சுப்ரமணியத்தை எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் அவர் பக்கத்து வீடுதான், பங்காளி முறை வேண்டும் அதனால் சிறு வயது முதலே தெரியும்.

சுப்ரமணியத்தின் மகன்கள் லோகேஷ்வரன் மற்றும் மகேஸ்வரன் ஆகியோர் ஆவார். மூத்த தாரத்து மகன்கள் விஜய் மற்றும் சிவா ஆவார்கள். சுப்ரமணியத்தின் மூத்த தாரம் பெயர் தெரியாது, அவர் இறந்துவிட்டார். சுப்ரமணியத்தின் பக்கத்துவீட்டில் எவ்வளவு ஆண்டுகள் இருந்தேன் என்றால் பிறந்தது முதல் அங்குதான் இருந்தேன். எனது சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, கொண்ணத்தான்பட்டி ஆகும். தற்போது அந்த ஊரில்தான் இருக்கிறேன். எனக்கு விவசாயம்தான் தொழில். எனக்கு கொண்ணத்தான்பட்டியில் நிலங்கள் உள்ளது. சுப்ரமணியன் எந்த ஊரில் வாழ்ந்தார் என்றால் மணப்பாறையில் வாழ்ந்தார். சுப்ரமணியன் முதல் திருமணம் செய்தது முதல் மணப்பாறையில்தான் வாழ்ந்து வந்தார். அவர் வங்கியில் வேலை பார்த்து வந்தார். சுப்ரமணியனுக்கு மணப்பாறையில் நிலங்கள் உள்ளதா என்று எனக்கு தெரியாது. 1 ஆம் வாதி சித்ராவின் சொந்த ஊர் என்னவென்றால் திருப்பத்தூர் தாலுக்காவில் உள்ள எஸ் வேலங்குடியாகும். மேற்படி வேலங்குடியில் நிறைய கோவில்கள் உள்ளது. அவற்றில் ஸ்ரீ காட்டு கருப்பர் மற்றும் உறங்காபுரி கருப்பர் ஆகியவை முக்கியமான கோவில்கள் ஆகும். அவற்றில் உறங்காபுரி கருப்பர் கோவில் இந்து அறநிலைய துறைக்கு கட்டுப்பட்டதாகும். அந்த கோவிலில் திருமணம் செய்வார்களா என்றால் அங்கு திருமணம் நடக்கும் நான் பார்த்ததில்லை. வேலங்குடியில் உள்ள எந்த கோவிலில் திருமணம் செய்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. மணப்பாறையிலிருந்து கொண்ணத்தான்பட்டி எவ்வளவு கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. வத்தலதோப்பம்பட்டி என்ற ஊர் திண்டுக்கல்

தாலுக்காவை சேர்ந்ததாகும். கொண்ணத்தான்பட்டியிலிருந்து அந்த ஊர் 80 கிலோமீட்டர் தூரம் இருக்கும். வத்தலதோப்பம்பட்டியில் எனக்கு உறவினர் உள்ளனர், நான் அந்த ஊரில் உள்ள பெண்ணைதான் திருமணம் செய்துள்ளேன். எனது திருமணம் கொண்ணத்தான்பட்டியில் உள்ள வீட்டில்தான் நடந்தது. வத்தலதோப்பம்பட்டியில் கதிரேச பெருமாள் கோவில் என்ற ஒரு கோவில் உள்ளது. அந்த கோவில் இந்து அறநிலைய துறை கட்டுப்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை. அது பொது கோவிலா, தனியார் கோவிலா என்றால் எல்லோருக்கும் பொதுவான கோவில்தான், ஒருவர் நிர்வாகம் செய்கிறார். பி மேட்டுப்பட்டியிலிருந்து ஒருவர் வருகிறார், அவர்தான் நிர்வாகம் செய்கிறார். அவரிடம்தான் அந்த கோவிலின் சாவி இருக்கும். சித்ராவிற்கு அந்த கோவிலில் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தேதி ஞாபகமில்லை, வருடம் 1997 ஆகும். அதற்கு பத்திரிக்கை அடிக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த திருமணத்திற்கு யார் வந்தார்கள் என்றால் முக்கியமான சொந்த பந்தம் மட்டும் வந்தார்கள். மொத்தம் 50 பேர் இருக்கும். அந்த கோவில் கணக்கு வழக்குகளை மேற்படி நிர்வாகம் செய்பவர்தான் வைத்திருப்பார். அந்த கோவிலில் திருமணம் செய்வதற்கு அந்த நிர்வாகியிடம் அனுமதி பெறவேண்டுமா என்றால் எனக்கு தெரியாது. எத்தனை மணிக்கு திருமணம் நடந்தது என்றால் காலை 09.15 மணியிலிருந்து 10.30 மணிக்குள் நடந்தது. என்ன கிழமை என்றால் ஞாபகமில்லை, நீண்ட ஆண்டுகள் ஆகிவிட்டது. திருமணம் நடந்த கோவிலுக்கு பணம் கட்ட வேண்டுமா என்றால் தேவையில்லை. எங்கள் சமூகத்தில் திருமணம் என்பது

ஜாதகம் பார்த்து செய்வார்கள். இந்த திருமணத்திற்கு ஜாதகம் பார்த்தார்கள். சுப்ரமணியனின் அக்காதான் ஜாதகம் பார்த்தார். திருமணம் எப்படி நடந்தது என்றால் தாலி செயினில் மஞ்சள் கயிறு கோர்த்து அணிவிக்கப்பட்டது. எங்கள் இனத்தில் தாலியை யார் கட்டுவார் என்றால் மாப்பிள்ளைதான் கட்டுவார். நாத்தனார் அதாவது மாப்பிள்ளையின் சகோதரிகள் மணப்பெண்ணின் பின்னால் இருந்து முடிச்சு போடுவார்கள். சுப்ரமணியத்திற்கு எத்தனை சகோதரிகள் என்றால் மூன்று சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். அந்த திருமணத்திற்கு சகோதரிகள் மூன்று பேரும் வந்திருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியும். சீதையம்மாள், சகுந்தலை, சரசு ஆகியோர் ஆவர். எங்கள் சமூக திருமணத்தில் ஐயரை வைத்து தாலி கட்டுவார்கள். இந்த திருமணத்தில் ஐயர் இருந்தாரா என்றால் கோவில் பூசாரி இருந்தார், அவர் ஐயரா என்று தெரியாது. அவர் பெயர் தெரியாது. அந்த பூசாரி இறந்துவிட்டார், அவரது மகன்கள் இருக்கிறார்கள். சுப்ரமணியனின் உறவினர்கள் யார் யார் திருமணத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் சுப்ரமணியனின் அக்காக்கள் மற்றும் அவர்களது கணவர்கள் வந்திருந்தார்கள். அந்த திருமணத்தின்போது புகைப்படம், வீடியோ போன்றவை எடுத்தார்களா என்றால் போட்டோ மட்டும் எடுத்தார்கள், அது தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். சித்ரா தான் தற்போது போட்டோ இல்லை என்று சொன்னார். இந்த வழக்கு சம்பந்தமாக 1 ஆம் வாதி சித்ராவை பார்த்தேன் என்றால் வழக்கு ஆரம்பித்ததிலிருந்து பார்த்து வருகிறேன். நான் விசாரணைக்கு வருவதற்கு முன்பாக அவரை பார்த்தேன். வாதியின் வழக்கறிஞரை எத்தனை முறை பார்த்தேன்

என்றால் ஒரு முறை பார்த்தேன். இந்த வழக்கு எந்த ஆண்டு போடப்பட்டது என்று தெரியாது. இந்த வழக்கு போட்டதைப் பற்றி முதன்முதலில் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார். பிரதிவாதிகள் இருவரையும் தெரியும். நான் திருமணம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் பிரதிவாதிகளுக்கு என்ன வயது இருக்கும் என்றால் 1 ஆம் பிரதிவாதி பழனியப்பனுக்கு 15 வயது இருக்கும், 2 ஆம் பிரதிவாதி சிவாவிற்கு சிறுவயது ஆகும், அந்த கோவிலில் நடக்கும் திருமணங்களை பதிவு செய்வார்களா என்றால் தெரியாது, கோவிலுக்கு மண்டபம் கட்டி கொடுத்ததால் இந்த திருமணம் நடந்தது. அது என்ன மண்டபம் என்றால் நான்கு கால் வைத்து திருமணம் நடப்பதற்கான மண்டபம் ஆகும். அந்த மண்டபத்தில் திருமணங்கள் நடக்கிறதா என்றால் அந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் திருமணம் செய்வார்கள். தற்போது அங்கு நடக்கும் திருமணங்களை பதிவு செய்கிறார்களா என்றால் தற்போது அரசாங்கம் அதன் அருகிலேயே ஒரு பெரிய மண்டபம் கட்டியுள்ளது, அங்கு நடக்கும் திருமணங்களை பதிவு செய்கிறார்கள். அந்த மண்டபம் அரசு எப்போது கட்டியது என்றால் 7 வருடங்கள் இருக்கும். கதிரேச பெருமாள் கோவிலில் அரசு மண்டபம் கட்டுவதற்கு முன்பாக எந்த திருமணமும் நடந்ததில்லை என்றால் சரியல்ல. அரசு மண்டபம் கட்டியபிறகுதான் அங்கு திருமணம் நடத்திவைக்கப்படுகிறது என்றால் சரியல்ல. திருமணத்தை புகைப்படம் எடுத்தவர் யார் என்றால் ஒரு ஸ்டியோவிலிருந்து வந்தவர், அவர் யார் என்று தெரியாது. கொண்ணத்தான்பட்டியில் சுப்ரமணியனுக்கு எவ்வளவு இடம் உள்ளது என்றால் 2 ஏக்கர்

நிலம் மற்றும் வீடு உள்ளது. அந்த வீட்டில் தற்போது யார் இருக்கிறார்கள் என்றால் தற்போது பூட்டியுள்ளது, விசேஷ காலத்தில் எல்லோரும் வருவார்கள். கொண்ணத்தான்பட்டியில் உள்ள சுப்ரமணியன் வீட்டில் சமீப காலத்தில் ஏதேனும் விசேஷம் நடந்ததா என்றால் அவரது இறப்பு சடங்கு நடந்தது, வேறு ஏதும் நடக்கவில்லை. சுப்ரமணியனின் இறுதி சங்கு யார் செய்தார்கள் என்றால் வாதிகள், பிரதிவாதிகள், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்துதான் செய்தார்கள். சுப்ரமணியனின் உடலுக்கு யார் கொள்ளி வைத்தார்கள் என்றால் 1 ஆம் பிரதிவாதி வைத்தார். நான் சொன்னதுபோல் சுப்ரமணியனுக்கும், 1 ஆம் வாதி சித்ராவிற்கும் எந்த திருமணமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1 ஆம் வாதியின் உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் பிரதிவாதி தரப்பில் 1 ஆம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை** - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.